பக்கங்கள்: ஆறு

Registered as aNewspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை (18-10-1992) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 325

# அரபு நாடுகளின் உதவி பெற்று முஸ்லிம் படை அமைக்க முயற்சி

## அஷ்ரப் இரகசிய நடவடிக்கை

கொழும்பு, அக்டோபர் 18

ஸ்ரீலங்கா இராணுவத்தில் தனி முஸ்லிம் படைப்பிரிவு ஒன்றை நிறுவுவதற்காக மத்திய கிழக்கு நாடுகளின் உதவியை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் நாடியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

விமானப் படையின் முன்னாள் தளபதி ஹறி குணதிலக செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு இத்தகவலை வெளியிட்டார்.

அரபு நாடுகள் மூலம் ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்தி, இராணுவத்தில் முஸ்லிம் படைப்பிரிவு ஒன்றை அமைப்பதற்கான இரகசிய நடவடிக்கைகளில் அஷ்ரப் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் உள்ள முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக இராணுவத்தில் முஸ்லிம் படைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று முஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்புக் காவல் கைதிகளாக 6ஆம் மாடியில் 51 தமிழர்கள்

### ஐ. நா. மனித உரிமைகள் குழுவுக்கு மகஜர்

கொழும்பு, அக். 18

"ஸ்ரீலங்கா பொலீஸ் தலைமையக ஆறாம் மாடியில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 51 தமிழ்க் கைதிகளின் நிலை அடிப்படை மனித உரிமைகளை மீறியதாக உள்ளது."

இலங்கைக்கு வந்துள்ள ஐ. நா. மனித உரிமைகள் தூதுக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் உட்பட மூன்று சிங்களவர்களும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர், செயலாளர் ஆகிய இரு தமிழர்களும் அனுப்பியுள்ள மகஜரிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஆறாம் மாடியில் நான்கு பெண்கள் உட்பட 51 தமிழர்களும், 3 சிங்களவர்களுமாக மொத்தம் 54 பேர் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் 30 பேர் இருக்கக்கூடிய வசதியே உள்ளது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

காற்றோட்ட வசதி அறவே இல்லை. மழை பெய்தால் ஒழுக்கு ஏற்படும் நிலை, மருத்துவ வசதியும் இல்லை.

இப்படியான கஷ்ட நிலைமையினால் அங்குள்ள கைதிகள் அனைவரும் நோயாளிகளாக உள்ளனர். — என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## தவறுதலாக ஆனையிறவில் இறங்கி படையிடம் சிக்கிய 2 பேர் விடுவிப்பு

வடமராட்சி, அக். 18

கடலில் வழிதவறி ஆனையிறவுப் பக்கம் போய் கரையிறங்கிய சமயம் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டை அடுத்து—

காணாமற் போனதாகக் கருதப்பட்ட இருவர் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம் சிக்கிய இவர்கள் படையினரால் விடுவிக்கப்பட்டதை அடுத்து நேற்று யாழ்ப்பாணத்துக்குக் கூட்டி வரப்பட்டனர்.

கடந்த 28 ஆம் திகதி அதிகாலை ஆலங்கேணியில் இருந்து கிளாலி நோக்கி வந்த படகு ஒன்று பாதை மாறி ஆனையிறவுப் பக்கம் கரையை அடைந்ததும்—

அதிலிருந்து பயணிகள் இறங்கி, கரையை நோக்கி "அண்ணே! அண்ணே!!" என்று அழைத்தவாறு முன்னேறிய போது கரையிலிருந்த படையினர் அவர்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததும்—

இச்சம்பவத்தில் நான்கு பேர்வரை காணாமல் போனதாக முன்னர் செய்தி வெளியாகியிருந்ததும் தெரிந்ததே.

இப்படகில் பயணம் செய்த இருவரே இப்போது விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

நீர்வேலியைச் சேர்ந்த இன்னத்தம்பி ஈஸ்வரகுமார், கொக்குவில் — தாவடியைச் சேர்ந்த கனகசபை இரத்தினசிங்கம் ஆகிய இருவருமே விடுவிக்கப்பட்டனர்.

ஆனையிறவில் படையினரால் பிடிக்கப்பட்ட இவர்கள் பின்னர் அங்கிருந்து ஹெலி மூலம் பலாலிக்கு அழைத்து வரப்பட்டு பின்னர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவுப் பகுதியில் போய் இறங்கி

## "அண்ணே! அண்ணே!!" என்று அழைத்தவருக்கு ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம், அக். 18

"படையினரின் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் — காயமடைந்த நிலையில் — ஆனையிறவுக் கரையில் கிடந்தேன். தொடர்ச்சியாக துப்பாக்கிச் சூடு நடத்திய படையினர் திடீரென எம்மை நோக்கி குண்டு ஒன்றை வீசினர். பெரும் சத்தத்துடன் அது வெடித்தபோது என் உடலில் எங்கும் எரிகாயங்கள் ஏற்பட்டு இரத்தம் கசியத் தொடங்கியது. உணர்விழக்கும் நிலையில் நானும் என்னுடன் கூட வந்த இளைஞரும் பொழுது புலரும் வரை கடற்கரையில் கிடந்தோம்.

"பொழுது விடிந்ததும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரவில் ஷெல் தாக்கு!

தொண்டமனாறு பகுதி குடிமனைகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் திடீரென ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

வளலாய் இராணுவ முகாமிலிருந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேசமயம் வலி. வடக்கில் அளவெட்டி, தெல்லிப்பளை, கட்டுவன் மற்றும் முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு முழுவதும் விட்டு விட்டு ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதோடு, சரமாரியான வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

பலாலி இராணுவ முகாமில் இருந்தும் நேற்றுக்காலை 10.00 மணியளவில் வளலாய், வயாவிளான் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

(ஓ-165-18-10-68)

### தெல்லிப்பளையில் மீட்பு நிதி

யாழ்ப்பாணம், அக். 18

உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் பணியில், நாளை திங்கட்கிழமை தெல்லிப்பளை மக்களிடம் இருந்து மீட்பு நிதி சேகரிக்கப்படவுள்ளது.

தெல்லிப்பளை உ. அ. அதிபர் பிரிவு மக்கள் நாளை பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மல்லாகம் [illegible] மீட்பு நிதியைச் செலுத்தலாம். (ஓ)

## 'சுப்ப சொனிக்' விமானங்கள் நேற்று ஏற்படுத்திய கிலி!

ஸ்ரீலங்கா விமானப் படையின் நவீன "சுப்ப சொனிக்" விமானங்கள் இரண்டு நேற்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பறந்து மக்களைப் பயமுறுத்தின.

நேற்று காலை சுமார் 8.45 மணிக்கு இரண்டு சுப்ப சொனிக் விமானங்கள் பேரிரைச்சலுடன் யாழ்ப்பாண நகரின் வான் பரப்பில் ஒன்றன் பின் ஒன்றாக பெருவட்டம் போட்டுப் பறந்தன.

மக்கள் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தப்போவதாக அஞ்சிப் பதற்றமுற்றனர். பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர்.

பதுங்குகுழிகள் இல்லாதவரும் என்ன செய்வதென்று தெரியாமல் பேயறைந்தனர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் சூட்டுக்கு இலக்கான

## சிறுவன், இரு பெண்களின் சடலங்கள் கரை ஒதுங்கின

தென்மராட்சி, அக். 18

கிளாலி குருமுனங்கு கடற் பிராந்தியத்தில் வைத்து கடந்த 8 ஆம் திகதி படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சிறுவனும் மற்றும் இரு பெண்களினதும் சடலங்கள்—சுமார் எட்டு நாட்களின் பின்னர்—கயிற்றால் ஒன்றாகக் கட்டப்பட்டு அழுகிய நிலையில் கடந்த வியாழக்கிழமை மாலை அல்லிப்பளையில் கரை ஒதுங்கின.

இச்சடலங்களில் இருந்த உடைகள் மூலம் அவை அடையாளம் காணப்பட்டன.

மல்லாகம் தேவாலய வீதியைச் சேர்ந்த நாகமுத்து மனோன்மணி (வயது 42), அவரது மகன் நாகமுத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினரின் ரோந்து தீவிரம்!

ஸ்ரீலங்கா கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

வியாழன் அதிகாலை பொலன்னறுவையில் நான்கு கிராமங்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்தே, கடற்படை ரோந்து தீவிரமாக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த தமது சகாக்களுடன் விடுதலைப் புலிகள் கிழக்கிலிருந்து தப்பி யாழ். குடாநாட்டுக்குச் செல்லலாம் என்றும்—

அதைத் தடுப்பதற்காக ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும்படி கடற்படையினருக்கு முன்னெச்சரிக்கைத் தகவல் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார். (ஒ-11)

## அச்சுவேலி பகுதியில் நேற்று ஹெலி சூடு! ஷெல் தாக்கு!!

அச்சுவேலி, பத்தமேனிப் பகுதியை நேற்று பிற்பகல் 2 மணியளவில் வட்டமிட்ட ஹெலி ஒன்று, குடியிருப்புப் பகுதிகளை நோக்கி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது. வீதியால் சென்ற வாகனங்களை நோக்கியும் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹெலி சென்ற கையோடு, சுமார் 2.30 மணியளவில் அதே பகுதியை நோக்கி ஷெல் வீச்சும் நடத்தப்பட்டது.

இதனால் அச்சுவேலிப் பகுதியில் பதற்றநிலை நிலவியது.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி சில வீடுகள் சேதம் அடைந்தன என்றும் சிலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பலாலி படையினர் சூட்டுக்கு ஈவினையில் பெண் காயம்

யாழ்ப்பாணம், அக். 18

பலாலி இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு ஈவினையில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஈவினையைச் சேர்ந்த மாணிக்கம் செல்லம்மா (வயது 50) என்ற பெண்ணே காயமடைந்தார்.

வழமைபோல இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு பாதுகாப்பான இடத்தில் தங்குவதற்காக வீட்டில் இருந்து புறப்பட்ட சமயமே இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

தொடர்ந்து சுமார் 30 நிமிட நேரம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

மரமின்றிப் போனால
மழையின்றிப் போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு நேரத்தை வேறிடங்களில் கழிக்கும் அளவெட்டி பகுதி மக்கள்

அளவெட்டி, அக். 18

அளவெட்டி பகுதியைச் சேர்ந்த மக்கள் இரவு நேரத்தை கோவில்கள், பாடசாலைகள் மற்றும் உறவினர் வீடுகளிலேயே கழிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயந்தே அவர்கள் இரவில் வீடுகளில் தங்குவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக மாலையானதும் மக்கள் சாரி சாரியாக வேறு இடங்களை நாடிச் செல்வதையும் —

காலையானதும் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு அவர்கள் திரும்பி வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (த-13)

## திறந்து வைக்கப்பட்டது

சாவகச்சேரி, அக். 18

தென்மராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஐந்தாவது இணை மட்டுவில் பொன்னம்மாள் வீடமைப்புத் திட்ட திருமலை அகதிகள் முகாமில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (த 31)

# இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், அக். 18

மல்லாகம் ஸ்ரீ முருகன் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் — 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று மாலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த ஆட்டங்களில் சென். மேரீஸ் "S" அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் அணியும் —

சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து ஞானகலா அணியும் மோதவிருக்கின்றன. (உ)

## நாளை

யாழ்ப்பாணம், அக். 18

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆங்கில தின நிகழ்ச்சிகள் நாளை காலை 10 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

ஆங்கிலக் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. டி. ஆர். அருமைநாயகம் தம்பதியர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ழ)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், அக். 18

யாழ் போதனா வைத்தியசாலையின் சுற்றுப்புறப் பகுதிகள் அண்மையில் விடுதலைப் புலிகளினால் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டன.

நுளம்பு பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் மற்றும் சுகாதார சீர்கேடுகளைப் போக்கும் முயற்சியாகவும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப் புலிகளின் ஆண், பெண் படை அணிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

## றோட்டறி கழகம் சிரமதானம்

யாழ். றோட்டறிக் கழகத்தினர் இன்று காலை கைதடி வயோதிபர் இல்லத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்ள உள்ளனர். அத்துடன் இல்லத்தைச் சேர்ந்த அனைவருக்கும் புதிய உடுதுணிகளும், மதியபோசனமும் வழங்கப்படும்.

இதேவேளை — அன்றைய தினம் கைதடி அனாதைச் சிறுவர் இல்லத்தில் உள்ள 32 சிறுவர்களுக்கும் யாழ். றோட்டறிக் கழகம் மதியபோசனம் வழங்குவதுடன் ஹற்றன் நஷனல் வங்கியில் ரூபா 100 வீதம் இடப்பட்ட 32 சேமிப்புக் கணக்கு புத்தகங்களையும் வழங்குவர். (த)

## மாவட்ட வைத்திய இணைப்பதிகாரி நியமனம்

முறிகண்டி, அக். 18

கிளிநொச்சி மாவட்ட வைத்திய இணைப்பதிகாரியாக டாக்டர் எம். சந்திரசேகரம் கடந்த மாத இறுதியில் நியமிக்கப்பட்டார்.

பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகர் ஊடாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரால் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (த-97)

## விளாத்திக்குளம் புனரமைப்பு

தியாகி திலீபனின் 5ஆம் ஆண்டு நினைவையொட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக வவுனியாக் கோட்டத்தினால் விளாத்திக் குளத்தின் கணிசமான பகுதிகள் புனரமைக்கப்பட்டன. இது பண்டைக் காலத்து புராதன குளம் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குளத்தின் கீழ் உள்ள மொத்தக் காணி 100 ஏக்கர் ஆகும். இச்சிரமதான வேலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரும், முத்துமாரி நகர், புதூர் சந்தி மக்களும் இணைந்து மேற்கொண்டனர். (இ)

## பிரிட்டிஷ் அமைச்சர் தூஸா பேச்சு

கொழும்பு, அக். 18

பிரிட்டிஷ் துணை அமைச்சர் மார்க் லெனொக்ஸ் போய்ட் கொழும்பில் மனித உரிமைகள் ... திரு. ஜே. எப். ஏ. சூஸா ... நடத்தினார். (த-எ)

# கூட்டுறவு சபையினரின் மறியல் ஒத்திவைப்பு

## மக்கள் வங்கிக்கு 2 வார அவகாசம்

யாழ்ப்பாணம், அக். 18

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தின் முன்னால் நடத்தவிருந்த மறியல் போராட்டத்தை யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினர் ஒத்திவைத்துள்ளனர்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைப் பணத்தை வைப்பிலிடுவதற்கு ஏற்க முடியாது என்று மக்கள் வங்கி மறுத்ததை ஆட்சேபித்தே இந்த மறியல் போராட்டம் நடத்தப்படவிருந்தது.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளருக்கும் ப. நோ. கூ. ச. பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே மறியல் போராட்டத்தை ஒத்திவைத்ததாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டுறவுச் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக சுமுகமான தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் இம் மாதம் 31 ஆம் திகதி வரை அவகாசம் கேட்டதற்கமையவே மறியல் போராட்டம் பிற்போடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
## சிவபாக்கியம் நடராஜா

மண்ணுறவு: 18—04—1924
விண்ணுறவு: 20—09—1992

நேற்றுவரை பாசத்தைச் சொரிந்து நின்ற தெய்வம்- நீங்கள்

காற்றோடு காற்றாகி அனலோடு அனலாகினீர்களே
அம்மா, அம்மம்மா, அப்பாச்சி மாமி-
என்றழைத்தோமே!

எம்மால், இனி அப்படி அழைக்கமுடியாது.
இதை நினைந்து ஏங்கி நிற்கிறோம்.
புன்னகை வாயிலே, பெருநகை நெஞ்சிலே
என்றிருந்தீர்கள்

வேறு எதனையும் ஏற்க விரும்பாத அமர காவியமே
எம்மை வளர்த்து உருவாக்கிவிட்ட உங்கள்
சேவடியை

சிந்தும் கண்ணீரால் கழுவி நிற்கின்றோம்-
வணங்குகிறோம்.

எமது தெய்வத் தாயின் அந்தியேட்டி செவ்வாய்க்கிழமை (20-10-1992) காலை 7-00 மணிக்கு நடைபெறும். காலைக்கிரியை, மதிய உணவு இருநிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ந. இராஜேஸ்வரன்,
ந. இராஜகோபால்
ந. இராஜலிங்கம்,
ந. இராஜரத்னம்;
திருமதி இ. ஸ்ரீராஜபுலேந்திரன்,
திருமதி இ. சிவகுருநாதன்.

கிருஷ்ணவாசா,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(22894)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 08 — 1956
மறைவு: 18 — 10 — 1991

## நமசிவாயம் சுரேந்திரகுமார்
(சுரேந்தி)

ஊர் போற்ற உலகம் போற்ற வாழ்ந்த நீ
ஊர் மாறிப் போனபின் சென்றனையோ -
இறையைப் போற்ற
கார் மாமிசை காலன் வரின் கலபத்
தேர் மாமிசை வருவான் முருகன் - என்ற நீ
கார் மீதேறிச் சென்ற போது
தேர் மீது வந்தானோ முருகன்-உன்னை ஆட்கொள்ள
கேட்போருக்கு இல்லை எனாது கொடுத்தாய்
கேட்டு விட்டான் உன் உயிரைக் காலனவன் - உன்
மணக் கோலம் காணக் காத்திருந்தோம் - நீ
கணப் பொழுதில் சென்றனையோ எமைவிட்டு
அன்புச் சகோதரனாய், ஆசை மருமகனாய்.
இன் சொல் பேசும் உத்தமனாய்.
இனிய மைத்துனனாய்
என்றென்றும் எம் நெஞ்சில் வாழ்ந்து வரும் நீ -
விண்ணுலகம்
சென்று இன்று ஓராண்டு ஆனதடா - சுரேந்தி!
நீ விண்ணுலகம் சென்றாலும் மறவோமடா உன்னை
மண்ணுலகம் உள்ள வரை.........

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

சகோதரர், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்:

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் ஆறுமுகம் குகதாசன்
(சிவம்)

தோற்றம்: 17—08—1953
மறைவு: 29—10—1991

திதி: 18—10 1992

பத்தை மேனியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிலாசம் நீர்வேலியில் வசித்து இறுதியில் குடும்ப நண்பனிடம் வந்து மிருசுவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இறைவனடி சேர்ந்த நண்பனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

சந்திரதேவா குடும்பத்தினர்,
சி. இராசரத்தினம் (சாரதி).

மிருசுவில்.

(22941)

---

# நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
## விசுவலிங்கம் பரமநாதன்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)

மண்ணில்: 17 — 04 — 1922
விண்ணில்: 09 — 10 — 1991

திதி: 18 - 10 - 1992

ஆண்டு ஒன்று சென்றாலும், அழியாக் கோலமதாய் விளங்கும் எங்கள் அன்புத் தெய்வமே! அணையா தீபமே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் சிகரமே! நெஞ்சம் நிறைந்தவரே! நீங்கள் எங்களைப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும், எம் நெஞ்சை விட்டு நீங்கவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்;
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

18, பாரதி வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்;

(22937)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

# தச்சு தொழிலாளர்களுக்கு உதவுவதற்கு நடவடிக்கை

தற்போது நாட்டில் நில வும் சூழ்நிலைகளால் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ள தச்சுத் தொழிலாளர்களுக்கு உதவ அரச சார்பற்ற நிறு வனங்களின் இணையம் முன் வந்துள்ளது.

தச்சுத் தொழிலாளர் சங் கத்தினர் தமது அங்கத்தவர் களின் தற்போதைய கஷ்ட நிலையை சுட்டிக்காட்டி தமக்கு உதவும் படி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இணையத்தில் அங்கம் வகிக் கும் நிறுவனங்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர், காணா மற் போனோர் ஆகியவர் களுக்கு வழங்கி வரும் உதவி கள் போன்று பாதிக்கப்பட்ட தச்சுத் தொழிலாளர்களுக்கு வழங்கவும் இணையம் தீர் மானித்துள்ளது.

அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் தற்காலிக கொட்டகைகள் அமைக்கும் பணியில், பாதிக்கப்பட்ட தச் சுத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங் கவும் இணையம் முன்வந்துள் ளது. (த-162)

## அ.தி.மு.க. அரசை கவிழ்க்கும் எண்ணம் எமக்கு இல்லை

### காங்கிரஸ் பிரமுகர் கூறுகிறார்

புதுடில்லி, அக். 18

அ. தி. மு. க. அரசைக் கவிழ்க்கும் எண்ணம் காங் கிரஸ் கட்சிக்கு இல்லை. காங்கிரஸ் - அ. தி. மு. க. உறவு தொடர்ந்து நீடிக்கும்.

காங்கிரஸ் கட்சியின் செய் தித் தொடர்பாளர் வி. என். காட்கில் புதுடில்லியில் செய்தி யாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி, அ. தி. மு. க. அரசுடன் தொடர்ந் தும் ஒத்துழைத்து வரும் என்றும் அவர் சொன்னார்.

## மக்களால் மட்டுமே என்னை பதவியிலிருந்து நீக்கமுடியும்

### ஜனாதிபதி பிரேமதாஸா

கொழும்பு, அக். 18

மக்களினால் மட்டுமே என் னைப் பதவியில் இருந்து அகற்ற முடியும்.

ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு சொன்னார்.

மனித உரிமைகள் மீறப்படு வதாகவும், ஜனநாயகம் இங்கு இல்லை என்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி பெரும் கூச்சல் போட் டார்.

ஆனால் அவர் கட்சியின் இளைஞர் அணியின் தேர்தல் தனக்கு சாதகமாக இருக்காது என்பதால் துரிதமாக செயல் பட்டு தேர்தல்களை செல்லு படியாகாமல் செய்தார்—என் றும் அவர் மேலும் சொன் னார். (த)

## வெள்ளைப் பிரம்பு தின விழா

யாழ்ப்பாணம், அக். 18

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பரி. யோவான் கல்லூரியில் நடைபெறு கிறது.

யாழ் விழிப்புலனற்றோர் சங்கம், யாழ். லயன்ஸ் கழக ஆதரவுடன் இதனை நடத்து கிறது.

வைபவத்தில் பிரதம விருந் தினராக சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ர. சிவசிதம்பரமும் — சிறப்பு விருந்தினராக லயன்ஸ் வலயத் தலைவர் எஸ். இராம கிருஷ்ணனும் கலந்து கொள் வார்கள்.

நவீலட் பாடசாலை அதி பர் திரு. வி. கே. கோபால கிருஷ்ணன், யாழ். நற்சமூக நடு நிலையச் செயலாளர் திரு. சந்திராப்பிள்ளை, லய ன்ஸ் கழகத்தைச் சேர்ந்த திரு கே. யுகபாலசிங்கம் ஆகி யோர் சிறப்புரை ஆற்றுவார் கள்.

## அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி கொட்டிலில் இயங்கும் பாடசாலை

அச்சுவேலி, அக். 18

அச்சுவேலி கதிரிப்பாய் சுப் பிரமணிய வித்தியாசாலை மாணவர்கள் அடிப்படை வசதி எதுவும் இல்லாத ஒரு கொட்டிலில் கல்வியை தொடர்கின்றனர்.

பாதுகாப்புக் கருதி இட மாற்றம் செய்யப்பட்ட கதி ரிப்பாய் சுப்பிரமணிய வித்தி யாலயம் தற்போது அச்சு வேலி ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள தனியார் கல்வி நிலை யம் ஒன்றில் இயங்கி வரு கிறது.

இங்கு குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதி கிடையாது என்றும் ஒரு கரும்பலகையை மூன்று வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒரே சமயத் தில் பயன்படுத்துகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (இ-11)

## ப. நோ. கூ. ச. மூலம் மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ப. நோ. கூ. சங்கம் தனது எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு பங் கீட்டு அட்டைக்கு அரை லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கவுள்ளது.

அடுத்த வாரத்தில் இருந்து அரை லீற்றர் 18-00 ரூபா வுக்கு விநியோகிக்கப்படவுள் ளதாக யாழ் ப. நோ. கூ. சங்கம் நேற்று அறிவித்துள் ளது. (இ-17)


# MODERN EDUCATION CENTRE

UDUPPIDDY.

## A/L 93

★ மீட்டல் வகுப்புக்கள் ★

ஆரம்பம்: 20 — 10 — 1992 காலை 10-30 மணி

பௌதிகவியல் — திரு. லோகசிங்கம்
கணிதவியல் — திரு. பவான்
விரிதம் — திரு. S. K. சோதிலிங்கம்
அளவையியல் — திரு. பவான். S. சோதி
இந்து நாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன்
தமிழ் — திரு. நடா

நடைபெறும் இடம்:

சத்தியநாதன் நினைவு தூபி முன்பாக, லிங்க வீதி, கல்வெட்டி.

[22920]



# தேவை

★ மெஷின் மைண்டர்.

★ கொம்போசிஸ்டர்.

★ புத்தகம் கட்டுபவர் (புக் பைண்டர்)

மேற்படி பதவிகளுக்கு முன் அனுபவம் உள்ள திறமைசாலிகள் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 21 — 10 — 1992

விளம்பர இலக்கம் — 453,

C/o உதயன்,

யாழ்ப்பாணம்.

[22908]



# சித்ராலயா யாழ்நகரில்

★ போட்டோஸ்ரற் பிரதிகள்
Photostat Copies

★ பாஸ்போர்ட் படங்கள்
Passport Photographs

★ தேசிய அடையாள அட்டைப் படங்கள்
(அரச அங்கீகாரம் பெற்றவர்கள்)
National Identitity Card Photographers
(Government Approved)

★ கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் வேண்டிய அளவுகளில் பெரிதாக்கல்
Black and White Photographs Enlargments

★ கலர்ப் புகைப்படங்கள்
(மங்கள வைபவங்கள் உட்பட)
Colour photographs (Indoor and outdoor)

போன்ற உங்கள் தேவைகளுக்கு என்றும்

## சித்ராலயா

172, ஸ்ரான்லி வீதி (அருச்சுனா வீதி),
யாழ்ப்பாணம். [சி/3592]



# ★ மிருதங்க அரங்கேற்றம் ★



செல்வன்
பரஞ்சோதி
ரதிருபன்

இன்று
18-10-1992
(ஞாயிற்றுக்கிழமை)

பிற்பகல்
3 30 மணி

நல்லை ஆதீன
கலா மண்டபம்

கலாவித்தகர் திரு. க. கண்ணதாசன் அவர்களின் பிரதம மாணவன்

## செல்வன் பரஞ்சோதி ரதிருபன் அவர்களின்

(யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்)

## மிருதங்க அரங்கேற்றம்

தலைவர்: பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள்
(தலைவர் சமஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

முதன்மை விருந்தினர்: கலாநிதி சபா. ஜெயராஜா அவர்கள்
(முதுநிலை விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்)

திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள்
(B. Sc., Dip-in-Ed, S. L. E. A. S. - அதிபர் யா/மத்திய கல்லூரி)

★ இசையரங்கு ★

| | | |
|---|---|---|
| சங்கீத பூஷணம் | திரு. எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள் | பாட்டு |
| இசைஞான திலகம் | திரு. உ. இராதாகிருஷ்ணன் அவர்கள் | வயலின் |
| | செல்வன் பரஞ்சோதி ரதிருபன் அவர்கள் | மிருதங்கம் |
| சங்கீத இரத்தினம் | திரு. எம். சிதம்பரநாதன் அவர்கள் | கெஞ்சிரா |
| வித்துவான் | செல்வன் சதா வேல்மாறன் அவர்கள் | கடம் |
| வித்துவான் | திரு. என். சண்முகலிங்கம் அவர்கள் | தம்புரா |

நன்றியுரை: கு. சோமசேகரம், மகாராணி புடைவை மாளிகை, யாழ்ப்பாணம்.

★ அன்புடன் அழைக்கின்றோம் ★

— திரு. திருமதி பரஞ்சோதி குடும்பத்தினர்

"தாயகம்", 45/8, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[22927]



உ

# பாராட்டு விழா நன்றி நவிலல்

சரவணச்சேரி

அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்பாள் தேவஸ்தானத்தில்

சென்ற 09 — 10 — 1992 வெள்ளிக்கிழமை

எமக்கு

★ கிரியாகானகலாமணி ★

எனும் கௌரவப் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்த

தேவஸ்தான தர்மகர்த்தா

## பிரம்ம ஸ்ரீ ப. மகாகணபதி சர்மா

அவர்கள் குடும்பத்தினருக்கும்

தலைமை வகித்தும் அருளுரை, வாழ்த்துரை வழங்கியும், கௌரவப்பட்டமளித்தும், பாமாலை சாத் தியும், பூமாலை அணிந்தும் எம்மைக்கௌரவித்த மதிப்புக்குரிய தலைவர், வணக்கத்துக்குரிய சிவா சாரியார்கள், நல்லையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள், தெல்லிநகர் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள், கனம் நீதிபதி அவர்கள், உயர்திரு. நகரசபை முதல்வர், இசைமணிகள், ஆசிரியமணி அவர்கள் ஆகியோருக்கும், மற்றும் வருகைதந்து சிறப்பித்த உற்றார், உறவினர், நண்பர்களாகிய அந்தணப் பெருமக்கள், பெரியார் கள், அனைத்து அன்புமிகு அடியார்கள் அனைவருக் கும், வாழ்த்துச் செய்தி அனுப்பிய சிவானந்த குரு குல பரிபாலனசபையினருக்கும் எமது அன்புகலந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள் கிறோம்.

இங்ஙனம்

அன்புடனும் மதிப்புடனும்:

சிவஸ்ரீ இ. சோமசுந்தரக்குருக்கள்-
குடும்பத்தினர்.
மட்டுவில்.

[22926]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒவ்செட் படத்துடன் கலண்டர்கள் விற்பனைக்கு உண்டு. தொகையாகப் பெற்றுக் கொள்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்; ஸ்ரீசாந்தா புத்தகசாலை, இல. 330, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (22883)

பூச்சி நீக்கப்பட்ட, நல்ல இன அல்சேஷியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: ந. சரவண பவன். மே/பா. புலவர் வீடு, வட்டு/இந்துக் கல்லூரிக்கு பின்புறம். சித்தன்கேணி. (5379)

பூச்சி நீக்கிய ஒரு மாதம் நிரம்பிய நல்ல இன ஜெர்மன் செப்பேட் அல்ஷேசன் நாய்க் குட்டிகளும் நல்ல இன லவ் பேட்ஸ் குருவிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் இடம்: இல. 12 A. கந்தபுராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (22928)

Hyline White Golden Commet இரண்டும் கலந்த கலப்பின முட்டைகள் அடைவைப்பதற்கு உகந்தவை. விற்பனைக்கு உண்டு 70/6, (புதிய) ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (5398)

## விற்பனையாகின்றது

சகல விதமான தீபாவளி வாழ்த்துக்கள் விற்பனையாகின்றன. மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும் இடம்: மக்மிலன் புத்தகசாலை, இல 8, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ஸ்ரீசாந் புத்தகசாலை. நல்லூர். (சி-3579)

## SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature, ஆங்கிலத்தில் பேசப் பயிற்றுவிக்கப்படுகிறது. V N. Kandasamy, A I. B (Part I) (London), Inter (London) 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (5386)

## பிறின்ரிங்

பிளேன் பில் புத்தகங்கள், வியாபார நிலையங்களுக்குத் தேவையான கலண்டர்கள் விரைவில் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்: ஸ்ரீ[illegible] அச்சகம், யாழ்ப்பாணம். (22883)

## வாழ்த்து மடல்கள்

ஏராளமான டிசைன்களில் அழகிய தீபாவளி வாழ்த்து மடல்கள், லட்சுமி, சிவசங்கரி, ராஜேஸ், ராஜேந்திர குமார்கள் நாவல்களும், சிறுவர் அரிச்சுவடிகளும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, இல 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (22848)

## மிளகாய்த்தூள்

இது யாழ்ப்பாண முறைப்படி தரமான மிளகாய் மற்றும் சரக்கு வகைகளைக் கொண்டு கைதேர்ந்த தொழிலாளர்களினால் சுகாதார முறைப்படி வறுத்து அரைக்கப்பட்டது. உங்கள் தேவைக்கேற்ப தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில். (சி-3596)

## மொழி தேர்ச்சி ஆண்டு - 5

புலமைப் பரிசில் பரீட்சையில் உச்சப்புள்ளி பெறத்தக்க வகையில், அனைத்து வகை வினாக்களும் 21 அலகுகளாக வகுக்கப்பட்டு, ஆக்கப்பெற்ற உன்னத நூல்; ஆக்கம்: பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு.வே.) வெளியீடு: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (5383)

## இடமாற்றம்

அளவெட்டியில் இயங்கி வந்த மயூரா வைத்தியசாலை தற்பொழுது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக இயங்குகின்றது. (4997)

## தாதிமார் தேவை

அனுபவம் உள்ள அல்லது பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். சந்திக்கும் நேரம்: காலை 8 மணி — 12 மணி வரை, மாலை 4 மணி — 8 மணி வரை. டாக்டர் மு. கனகசபை எம் பீ. எஸ்; மெடிக்கல் கிளினிக், 3 ஆம் கட்டை, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (5387)

## மணப்பெண் தேவை

நட்சத்திரம் பூசம், இந்து, வயது 36, வெளிநாட்டில் உதவிக் கணக்காளர், இடபம், மிதுனம், துலாம், விருச்சிகம் அல்லது தனு இலக்கின 28—33 வயதுள்ள அழகிய, படித்த மத்திய தர பெண் தேவை. திருமணம் கொழும்பில். உடன் தொடர்பு கொள்க. இல. 455, மே/பா, உதயன் யாழ்ப்பாணம். (22983)

சுவிற்சர்லாந்தில் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் (புனர்பூசம் 2ஆம் பாதம்) நல்லொழுக்கமுள்ள, படித்த, 28 வயது. இந்து வாலிபருக்கு அழகிய மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. சாதகக் குறிப்பு, பிறந்த நேரம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும். இல. 454, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (22919)

## ஹார்மோனியம்

சிறு திருத்தத்துடன் பாவித்த சிறிய ஹார்மோனியமும் மற்றும் ஜப்பான் சுவர் மணிக்கூடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் ஆ. முத்துவேல், 48/1, முதலாம் ஒழுங்கை, (மக்ரலல் லேன்) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (22924)

## O/L கணிதம்

Distinction பெறுபேறடைய தமிழ மீட்டல் உட்பட அனுபவமுள்ள B. Sc., (Ceylon) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (22936)

## கல்வி

G.C.E (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும். ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு விசேட சித்திக்குக் கற்பிப்பதில் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஒரு மாதத்தில் தொடர் 40 மணித்தியாலத்தில் குள் விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (22828)

## தவறிவிட்டது

செம்மணிக்கும் நாவற்குழி சந்திக்கும், இடையில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிறிய பார்சல் தவறிவிட்டது. எடுத்தவர்கள் 38, கோவில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5399)

ஜெகதீசன் சசிகாவாகிய நான் சுன்னாகம் ஸ்ரேசன் வீதியூடாக மருதனார்மடத்திற்கு போகும் வழியில் இல: 715482088 V தேசிய அடையாள அட்டை, புகைப்படங்கள், பல்கலைக்கழக அனுமதி அட்டைகளடங்கிய சிறிய பேர்ஸ் ஆகியவற்றை 13-10-1992இல் தவறவிட்டு விட்டேன். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பிள்ளையார் ஸ்ரோர்ஸ், ஸ்ரேசன் வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (5405)

## தட்டச்சு, றோணியோ

தமிழ், ஆங்கில தட்டச்சு, றோணியோ வேலைகளையும், அச்சு வேலைகளையும் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவும்: கு. வி. அச்சகம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (5397)

## நீமியா உரம்

அடிக்கட்டு உரம் கரைந்தோ, நீராவியாகவோ விரயமாகாது பாதுகாக்கிறது. நீமியா உரம் பயிர் வளர்ச்சி. விளைச்சல் பெருக்கம், பூச்சி கள்விருந்து பாதுகாப்பு இதன் தனி சிறந்த அம்சங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற். (சி-3488)



சுவைத்து மகிழ்ந்திட
ரேஸ்ரியின்
புதிய தயாரிப்புக்கள்
★ KIDDIES SPECIAL
★ FRUIT CHOCOLATE

இவ்வொன்றினுள்ளும் அழகிய ஸ்ரிக்கர்கள்.

**Taste Line Industries (Pvt.) Ltd.**
14, Seenior Lane, Jaffna. (5396)

## ஓராண்டு நினைவஞ்சலி



| ஒளி விசியது: | ஒளி மறைந்தது: |
|---|---|
| 17 | 29 |
| — | — |
| 08 | 10 |
| — | — |
| 1953 | 1991 |

### அமரர் ஆ. குகதாசன் (சிவம்)

அணைந்தது ஓர் அன்புத்தீபம் - என்றும்
அணையாத எங்கள் பாசதீபம்!
மறைந்தது எங்கள் மணிவிளக்கு - மண்ணில்
இனி என்னைக் காப்பாற்ற இவ்வுலகில் யாருளர்
தணியாதோ என் குடும்ப குலவிளக்கு!

அன்னாரின் ஆத்ம சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி - சாரதா,
பிள்ளைகள் - சிந்துஜா, கணேசானந்தா.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (22731)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12 | 21 |
| — | — |
| 01 | 07 |
| — | — |
| 1929 | 1992 |

### அமரர் ஐயாத்துரை சிற்றம்பலம்

(நியூ சறோஜா நகை மாளிகை உரிமையாளர் - சாவகச்சேரி)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

தட்டாதெரு,
சமித்தாளை, சாவகச்சேரி. (22930)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 14 | 19 |
| — | — |
| 07 | 09 |
| — | — |
| 1911 | 1992 |

### அமரர் கந்தவனம் சின்னத்தம்பி

(சின்ராசா)

முன்னாள் அரச கட்டட ஒப்பந்தகாரரும், பஸ் கம்பெனி முகாமையாளரும், சமாதான நீதிபதியுமாகிய எங்கள் அன்புத் தெய்வம் இறைவனடி சேர்ந்த தினத்தன்று எங்களுக்கு பல வழிகளிலும் ஒத்தாசைப்பு வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள். அத்தோடு இன்று (18-10-92) ஞாயிறு இரவும், நாளை (19-10-92) திங்கட்கிழமையும் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்வுகளிலும் பங்குபற்றி, மதியபோசனவிருந்திலும் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்தியடைய வேண்டுதல் செய்யுமாறு அனைத்து அன்புள்ளங்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மலர் வாசம்",
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (22900)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 04 | 17 |
| — | — |
| 02 | 09 |
| — | — |
| 1974 | 1992 |

செல்வன்

### இரத்தினம் ஜெகநாதன்

(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன்)

தெய்வமாகி எம் குலத்தை
செழிக்க வைத்த நல்லோய் நீ
வைய வாழ்வு தன்னை நீத்து
வான வாழ்வை அடைந்தாலும்
ஐய நின்னை மறவாது
ஆண்டு பல சென்றாலும்
செய்ய பாதம் மனத்திருத்தி
சேர்ந்தெல்லோரும் வணங்குவோம்;

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
- கருணையூர் நண்பர்கள்.

சரணவாய் தெற்கு. (22935)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### திரும்பி வரும் அகதிகள் பாதுகாப்பு

தமிழ் நாட்டிலிருந்து திரும்பும் இருபதாயிரம் அகதிகளைத் தத்காலிகமாக வவுனியாவில் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த அகதிகளே வவுனியாவில் குடியமர்த்தப் படுவதாக பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாகவும் ஒரு தகவல் உண்டு.

அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அதே பகுதிகளில் குடியமர்த்தப்படுகிறார்கள் என்ற அர்த்தப்படவே இவ்வாறு கூறப்படுகிறது எனக் கொள்ளலாம். அரச படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் — விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் — தமிழர்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற தவறான அர்த்தத்தையும் இது தருகிறது.

ஆனால் உண்மை நிலை அதுவல்ல பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலேயே தமிழ் மக்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பில்லை வடக்கு — கிழக்கின் எந்தப் பகுதியிலாவது போராளிகளின் தாக்குதலில் படையினர் உயிரிழந்துவிட்டால், அப்பாவித் தமிழ் மக்களைப் பழிவாங்கும் தாக்குதல் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில்தான் நடக்கும்.

பழிவாங்கும் தாக்குதலுக்குச் சந்தர்ப்பம் இல்லாத போது, தேடுதல், சுற்றிவளைப்பு, கைது என்ற தொடர் நிகழ்வுகளின் மூலம் தமிழர்கள் பலர் காணாமற் போக படையினர் வழி செய்வர்!

திருமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில், தமிழர்களின் சொந்தக் கிராமங்கள் பலவும் இப்போது மக்கள் — தமிழர் — நடமாட்டமற்ற சூனியப் பிரதேசங்களாக மாறியுள்ளன. அது தப்பினால் அவை தமிழ் பெயர்களையே இழந்து புதிய சிங்களப் பெயர்களுடன் கூடிய கிராமங்களாக உருவெடுத்துள்ளன!

சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு நடத்தும் சிங்களக் குடியேற்றங்கள் வெகு விரைவாகவும், பெரும் எண்ணிக்கையிலும் தென்தமிழீழத்தில் நடைபெற்று வருகின்றன. அதன் பொருட்டு அகதிகளாகத் தமிழகம் செல்லாமல், உயிரைப் பணயம் வைத்து பல இடர்களின் மத்தியிலும் தமது சொந்த மண்ணில் வாழ்ந்த தமிழ் மக்கள் வீடுகளிலிருந்து விரட்டப்படுகிறார்கள்.

நிலைமை அவ்வாறிருக்க, தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று திரும்பும் தமிழர்களுக்கு அரசபடை பாதுகாவலனாக இருக்கும் என்று எப்படி நம்புவது? படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தாயகம் திரும்பும் அகதிகளைத் தங்க வைப்பது எலியின் பாதுகாப்பை பூனையிடம் ஒப்படைப்பதற்குச் சமனாகும்

இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்தவர்கள் இங்கு வந்தும் அகதிகளாக வாழ வேண்டிய சூழ்நிலையே உண்டு. அது ஒரு புறமிருப்பினும், அவர்களது உயிர் பாதுகாப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

ஆகையால் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் அகதி முகாம்களை நிறுவி, அவர்களை அங்கு தங்க வைத்துப் பாதுகாக்கும் பொறுப்பு அகதிகள் புனர்வாழ்வில் சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவனங்களுக்கு உண்டு. அதில் பெரும் பங்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தையே சாரும்.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் அகதி முகாம்களை நிர்மாணித்து, அந்தப் பகுதிகளை தாக்குதலற்ற பிரதேசங்களாக்குவதற்குப் பாதுகாப்புப் படையினரதும், விடுதலைப் புலிகளினதும் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். ஸ்ரீலங்கா அரசு விரும்புவது போல, பாதுகாப்புப் படையினர் கூறுவது போல, இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அகதிகளைத் தங்க வைக்க அனுமதிக்கக் கூடாது.

### ‘குமாரி’ மன்னாருக்கு

வடமராட்சி, அக். 18

பருத்தித்துறை துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்கி முடித்துக்கொண்டு ‘குமாரி’ கப்பல் நேற்று மாலை மன்னாருக்கு புறப்பட்டது. இக்கப்பல் நாளை மன்னார் துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்கும். [உ165]

### ஜெயலலிதாவுடன் சேர்ந்தனர்!

சென்னை, அக். 18

தமிழ் நாட்டின் முன்னாள் அமைச்சர்களான பி.குழந்தைவேலு ராஜா முகம்மது ஆகிய இருவரும் நேற்று முதலமைச்சர் ஜெயலலிதாவின் முன்னால் மீண்டும் அ.தி.மு.கவில் சேர்ந்து கொண்டனர்.

சென்ற பொதுத் தேர்தல்களுக்கு முன்னர் இவர்கள் இருவரும் அ.தி.மு.கவில் இருந்து விலகிச் சென்றிருந்தனர்.

இதேவேளை, அ.தி.மு.க. உருவாக்கப்பட்டவுடன் முதல் லோக்சபா உறுப்பினராகப் பொறுப்பு வகித்த திரு.மாயத்தேவரும் மீண்டும் அ.தி.மு.கவில் சேர்ந்து கொண்டுள்ளார். [ஒ]

### டிப்புளோமா பரீட்சைக்கு படிப்பு லீவு

அச்சுவேலி, அக். 18

யாழ்ப்பாண கல்விக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம்) இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒருமாதம் படிப்பு லீவு வழங்கப்படவுள்ளது.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா இறுதிப் பரீட்சைக்கு தோற்றும் ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதை அத்தாட்சிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் தமது விண்ணப்பத்தை உரிய முறையில் கல்வித் திணைக்களத்தில் சமர்ப்பித்து படிப்பு லீவைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-11]

# திருமலை நகருக்கு வெளியே செய்தியாளர் செல்லத் தடை!

## செஞ்சிலுவையினருக்கும் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், அக். 18

ஸ்ரீலங்கா படையினர் ஆக்கிரமித்துள்ள திருகோணமலை நகரைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு செய்தியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் போன்றவர்கள் செல்வதற்கு அனுமதி வழங்க அரச அதிகாரிகளும், இராணுவத்தினரும் மறுத்து வருகின்றனர்.

இதேசமயம் அவ்வப்போது பாதிப்புகளுக்கு உள்ளாகும் தமிழ்ப் பகுதிகளுக்கு, செஞ்சிலுவைச் சங்கத்தின் மருத்துவப் பிரிவினர் செல்லும் பயணங்களும் படையினரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

திருகோணமலை சகஜ நிலைக்குத் திரும்பி விட்டதாகவும் அங்கு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் காட்டவே செய்தியாளர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் போன்றவர்கள் திருமலை நகருக்கு மட்டும் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேசமயம், ஏனைய பகுதிகளில் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் ஒழுங்காக இயங்குவதில்லை. ஆசிரியர்கள், மாணவர்கள் படையினரால் கண்டபடி கைது செய்யப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டத் தளபதி வசந்தன் இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார். [ஒ]

# என்னை எவரும் அச்சுறுத்தி பணிய வைக்க முடியாது!

## சிறிமாவோ சொல்கிறார்

கொழும்பு, அக். 18

என்னை எவரும் அச்சுறுத்த முடியாது. இதைச் செய், அதைச் செய்யாதே என்று எனக்கு எவரும் கட்டளையிட முடியாது

சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

எனது அரசியல் வாழ்வில் பல பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்துள்ளேன். எனது கட்சி மற்றும் எனது குடும்பம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளுக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையுடன் உள்ளேன்.

நான் ஜனநாயகவாதி அல்லர் என்று கூறுபவர்கள் தன் கட்சி வாலிப முன்னணித் தேர்தலில் பயமுறுத்தலை ஆயுதமாகப் பாவித்தனர்.

அனுராவுக்குத் தலைமைப் பதவியை ஒப்படைக்கும்படி பிக்குகள் முன்னணி தீர்மானம் நிறைவேற்றியதான செய்தி உண்மையல்ல. அப்படி ஒரு கோரிக்கை விடுக்கப்படவுமில்லை. தலைவராக அவர்கள் என்னை ஏற்றுள்ளார்கள். கட்சியில் பெரிய பிளவுகள் கிடையா; கருத்து வேறுபாடுள்ள குழுக்கள் தான் உண்டு. அரசுப் பத்திரிகைகள் தான் பிளவை ஏற்படுத்த முயல்கின்றன.

எனக்கு வாரிசாக இன்னொரு பண்டாரநாயக்கா தலைமைப் பதவிக்கு வர வேண்டும் என்று நான் விரும்பவில்லை, உறுப்பினர்களின் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் பெற்ற எந்த உறுப்பினரும் தலைவராக வரலாம்.

தனது மனைவி தான் தனக்குப் பின் தலைவராக வர வேண்டும் என்று திரு. எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா ஒரு போதும் கூறவில்லை. அவர் கொலையுண்ட பின்னர் சுதந்திரக் கட்சித் தலைவராக வர ஒருவரும் முன்வரவில்லை. கட்சிக்கு தலைமை வகித்து அதனை வழி நடத்த நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். கட்சியில் நான் என்னை திணிக்கவில்லை;

கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் என்னை ஆதரிக்கின்றனர்; அவர்கள் நான் பதவி விலக வேண்டும் என்று விரும்பினால், நான் பதவி விலகத் தயார்; தலைமைப்பதவி தொடர்பாகக் கட்சிக்குள் வேறுபாடு ஏற்படுவதை நான் விரும்பவில்லை—

இப்படி திருமதி பண்டாரநாயக்கா கூறினார்; (த-எ)

### சுயசரிதை எழுதுகிறார் சிறிமா

கொழும்பு, அக். 18

உலகில் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றவரான 76 வயதான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது சுயசரிதையை எழுதுவதில் தற்போது ஈடுபட்டிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

40 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட சுதந்திரக் கட்சியை கடந்த முப்பது ஆண்டுகளாக தலைமை வகித்து நடத்தி வரும் திருமதி பண்டாரநாயக்கா; தற்போது உட்கட்சி நெருக்கடியை சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்.

மகன் அனுராவுக்குத் தலைமைப் பதவியை வகையளிக்கும்படி சுதந்திரக்கட்சிக்குள் பலமிக்க கோஷ்டி ஒன்று திருமதி பண்டாரநாயக்காவை நிர்ப்பந்தித்து வருகின்றது என்றும் கூறப்படுகிறது. [ஒ-எ]

### இந்திய மீனவரை தாக்க வேண்டாம்; கடற்படைக்கு இலங்கை அரசு உத்தரவு!

வழிதவறி இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழையும் இந்திய மீனவரை இலங்கை கடற்படை இனிமேல் அப்புறப்படுத்தாது இதற்கான உத்தரவை தனது கடற்படைக்கு இலங்கை அரசு விடுத்துள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சின் இணைச் செயலாளர் திரு. ஆர். கே. பாட்டியா இதனைத் தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 20 இந்திய மீனவர்களையும் 5 மீன்பிடிப்படகுகளையும் கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றனர். பின்னர் மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர், படகுகளும் விடுவிக்கப்பட்டன.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு கச்சதீவு பகுதியில் இந்திய மீனவர் மீன்பிடிக்கச் செல்லும் பாரம்பரிய உரிமை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும்—

எனினும் இயல்பான ஒரு சூழ்நிலையில் மீன்பிடிக்கும் உரிமையை மீண்டும் வழங்க இலங்கை அரசு உறுதி அளித்திருப்பதாகவும் அவர் சொன்னார். [த]

### வல்வையில் ஓவிய கண்காட்சி

வடமராட்சி, அக். 18

விடுதலைப் புலிகளின் இயக்க வரலாறும் தென் தமிழீழப் படுகொலைகளையும் சித்திரிக்கும் வகையில் அமைந்த ஓவியக் கண்காட்சி வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

வடமராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி சந்திரிகா காலை 8 மணிக்கு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். இந்தக் கண்காட்சியை இன்று மக்கள் பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது. [ஒ-165]

### ‘சுப்ப சொனிக்’...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கள் தோல் எங்காவது ஓடலாமா என்ற பதற்ற நிலையில் காணப்பட்டனர். வீதிகளில் சென்றவர்கள் மரங்களின் கீழும் ஏனைய இடங்களிலும் ஒதுங்கிக் கொண்டனர்.

விமானங்களைக் கண்ணால் பார்க்கக் கூடிய அளவுக்கு அவை குறைந்த வேகத்திலேயே பறந்தன.

விமானங்கள் இரண்டும் ஒவ்வொரு தடவை குண்டு வீசப் போவது போலத் தாழப் பறந்து மக்களைக் கிலி கொள்ளச் செய்தன.

இதே விமானங்கள் வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பகுதிகளிலும் வட்டமிட்டதால் அந்தப் பகுதிகளிலும் மக்கள் பெரும் பதற்றமடைந்தனர்.

தெல்லிப்பழை, சுன்னாகம் முதற்கொண்டு சுழிபுரம், மூளாய், வட்டுக்கோட்டை வரைக்கும், கிழக்கே நீர்வேலி, புத்தூர் வரைக்கும் இவ்விமானங்கள் பறந்து பயமுறுத்தியதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

இதேவேளை நேற்று அதிகாலை 4மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று குடாநாட்டின் மீது தாழப்பறந்து சென்றது; பிற்பகலில் அவ்ரோ விமானம் ஒன்றும் சென்றது; அதற்கிடையில்-12 சகடை விமானங்கள் வழமைக்கு அதிகமாகப் பல தடவைகள் குடாநாட்டுக்கு மேலாகப் பறந்து சென்றன.

[அ-15-17-162-51-68 28-111]

# விழிப்புலனற்றோருக்கு ஒரு வழிகாட்டி வெள்ளை பிரம்பு

வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புத் தினம் யாழ்ப்பாணத்தில் இன்று கொண்டாடப்படுகிறது; அதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

"தயாளகுணம், தாராள மனப்பான்மை, விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை என்பன மனித குலத்திற்கு மிக அவசியமான பண்புகள் என்றார் ஜிறீன் எனும் ஒழுக்கவியலாளர்.

இப் பண்புகளின் அடிப்படையில் தான் ஒவ்வொரு அமைப்பும் சமூகத்திற்கு உதவுகின்றது.

குறிப்பாக, வலது குறைந்தவர்களுக்கு உதவுவதற்கு — சேவையாற்றுவதற்கு இப் பண்புகள் மிக அவசியம்.

"வலது குறைந்தவர்கள் இறைவனால் சபிக்கப்பட்ட ஆன்மாக்கள் அல்லர், அவரால் நேசிக்கப்பட்ட மனிதர்களே," என்றார் காந்தியடிகள்.

சமூகம், அவ்வாறு பிறந்தவர்களை ஆதரிக்கவேண்டும் அதுவே சமூகப்பண்பாடு என்பதே லயன்ஸ் [illegible] வேண்டுதல்.

விழிப்புலனற்றோருக்காக, வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புத்தினத்தை ஒவ்வொருவருடமும் லயன்ஸ் நினைவுகூருவது இப்பெருநோக்கத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காகவே.

சட்டமூலம் அங்கீகாரம்

லயன்ஸ் கழகத்தினரின் முயற்சியால் 1930 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இலிநோய் மாவட்டத்தில் உள்ள பியோரியா நகரத்தில், "வெள்ளைப் பிரம்பு கண்பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னம்" எனச்சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதற்கு மக்கள் கொடுத்த அங்கீகாரமே வருடா வருடம் இதனை ஒரு முக்கிய தினமாக நினைவுகூரவைத்தது; எமது நாட்டில் 1949 ஆம் ஆண்டு, சர்வதேச விழிப்புலனற்றோர் சம்மேளனத்தின் சார்பில் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 15 ஆம் திகதி சர்வதேச வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புத் தினமாகப் பிரகடனப்படுத்[illegible] சமூக சேவை அமைப்புக்களும் ஏற்றுக்கொண்டன.

வெள்ளைப் பிரம்பு விழிப்புலனற்றோரின் வழிகாட்டி; அதை வைத்திருப்போர் விழிப்புலனற்றோர் என்பதை மற்றவர்களுக்குணர்த்தும் குறியீடு.

வெள்ளைப்பிரம்பு விழிப்புலனற்றோருக்கு துணிவையும், நம்பிக்கையையும் ஊட்டுகின்றது.

சமூகம் தம்மீது கொள்ளும் அக்கறையை - ஆதரவைத் தெரிவிக்கின்றது மற்றவரின் தயவில் தங்கி நிற்காது தாமே தமது கருமங்களை ஆற்ற உதவுகின்றது.

இதை மக்கள் புரிந்துகொள்ளவும், வெள்ளைப்பிரம்பை வைத்திருப்பவர்களை, உடன்பிறந்த சகோதரங்களாகக் கருதவும் இத்தினம் எம்மைத் தயார்படுத்துகிறது.

பாதையில்செல்ல, வாகனங்களை நிறுத்த, பாதையைக் கடக்க, மற்றவர் புலனைத் தம்பக்கம் திருப்ப, இச்சாதனம் அவர்களின் விழியாகத் தொழிற்பட நாமும் உதவுவோமாக!

— லயன்ஸ் வே. யுகபாலசிங்கம் —

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியும் சுவாமியும் 'பெட்டிஷன்' கோமாளிகள்

## ஜெயலலிதா வர்ணனை

சென்னை, அக். 18

"என் மீது ஊழல் குற்றச் சாட்டைச் சுமத்தி, எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய அனுமதி வழங்குமாறு கோரி தமிழக ஆளுநரிடமும் தனித்தனியாக மனுத் தாக்கல் செய்திருக்கும் கருணாநிதியும் சுப்பிரமணிய சுவாமியும் 'பெட்டிஷன்' கோமாளிகள் ஆவர்."

—இவ்வாறு வர்ணித்தார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா.

நேற்று சென்னையில் தமது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்தப் 'பெட்டிஷன்' கோமாளிகள் மக்கள் மீது நம்பிக்கை வைக்காதவர்கள்; அதிகாரத்திலும் மனுக்கள் சமர்ப்பிப்பதிலுமே ஈடுபாடுடையவர்கள்.

பேராசை பிடித்தோரும், சிலங்கள் ஆற்றோரும் கூப்பாடும், கோஷமும் போட்டாலும் அவற்றை நீங்கள் பொருட்படுத்தாதீர்கள்! —என்றார். (உ-10)

### தவறுதலாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பலாலியிலிருந்து காங்கேசன்துறையூடாக 'குமாரி' கப்பலில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு இருவரையும் செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் கூட்டிவந்தனர். (உ-165)

### இன்று

மட்டுவில் கல்வம் சந்திர மௌலீசப் பெருமான் ஆலய முன்னாள் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ. ஆ. சிவசாமிக் குருக்களை கௌரவிக்கும் உபசரணை விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மட்டுவில் செல்லப் பிள்ளையார் ஆலயத்தில் பிரதிஷ்டாவித்தகர் சிவஸ்ரீ சி. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஒ-117)

★ ★ ★

யாழ். வளமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கண்டுக்குளியிலுள்ள சங்கப் பணிமனையில் நடைபெறும். (ஒ)

★ ★ ★

செல்வன் பரஞ்சோதி ரதிரூபனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் பி. ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகும் அரங்கேற்ற விழாவில் கலாநிதி சபா. ஜெயராசாவும், அதிபர் திரு நா. க. சண்முகநாதபிள்ளையும் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

செல்வன் பரஞ்சோதி ரதிரூபன் கலாவித்தகர் கு. கண்ணதாசனின் பிரதம மாணவனாவார்.

★ ★ ★

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் இன்று பி. ப. 2 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி பி. இராஜேந்திரசிங்கம் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

கழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் புனரமைப்புக் கூட்டம் இன்று மு. ப. 10 மணிக்கு அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறும். (ஆ-30-99-165)

★ ★ ★

சாவகச்சேரி லயன்ஸ் கழகம், லியோ கழகங்கள் ஆகியன இன்று கைதடி வயோதிபர் இல்லத்தில் சிரமதானப் பணியை மேற்கொள்கின்றன. (ஒ-117)

### சிறுவன்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஸ்ரீநந்தகோபால் (வயது 10) ஆகியோரின் சடலங்களும்—

திருநெல்வேலி நாவலடி ஒழுங்கையைச் சேர்ந்த 22 வயது இளம் பெண் ஒருவரின் சடலமுமே அடையாளம் காணப்பட்டன. இப்பெண்ணின் இரு கைகளும் பின்புறம் சேர்த்துக் கட்டப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பெண்ணுடன் படகில் பயணம் செய்து, படையினர் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இவரின் தந்தையான சி. மயில்வாகனத்தின் சடலமும் கடந்த சனிக்கிழமை கரை ஒதுங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சடலங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டதால் கரை ஒதுங்கிய பகுதியிலேயே அவை அடக்கம் செய்யப்பட்டன.

கடந்த 8 ஆம் திகதி சூரமுனங் கடற் பிரதேசத்தில் படையினர் நடத்திய வெறியாட்டத்தில் உயிரிழந்ததாகக் கருதப்படும் ஐந்து ஆண்களின் சடலங்கள் கடந்த வாரம் வெவ்வேறு இடங்களில் கரை ஒதுங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

### அரபு நாடுகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் காங்கிரஸ் தொடர்ந்து வற்புறுத்தி வருவதும் —

ஸ்ரீலங்கா அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்து வருவதும் தெரிந்தவையே.

இதேவேளை—

"முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் அரசின் போக்கு எமக்குக் கவலை தருகிறது. முஸ்லிம்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும்."

என்று முஸ்லிம் தலைவர்களில் ஒருவரான ஜனாப் எம். எம். ஸுஹைர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

பொலன்னறுவை படுகொலை சம்பவத்தைத் தொடர்ந்தே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்படுகொலைக்கு [illegible] என்றும் அவர் [illegible]. (உ-10)

# "அண்ணே! அண்ணே!!...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவலரண்களில் இருந்து வந்த இராணுவத்தினர் எம்மைப் பிடித்தனர்."

—இவ்வாறு தமக்கு நேர்ந்த அனுபவத்தை விளக்கினார் தாவடியைச் சேர்ந்த — ஆறு பிள்ளைகளின் தந்தையான— கனகசபை இரத்தினசிங்கம்.

கடந்த மாதம் இளாலி நோக்கி வரும் வழியில் வழி தவறி ஆனையிறவுக் கரையில் கரையிறங்கிய இவர் இராணுவத்தினரின் பிடியில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டார்.

#### அனுபவம்

தமக்கு நேர்ந்த அனுபவம் பற்றி அவர் உதயன் செய்தியாளரிடம் மேலும் கூறியதாவது:-

இருட்டில் நாம் கரையை அடைந்த பகுதியை நோக்கி படகை மேலும் தள்ளியவாறு முன்னேறினோம். கரையை அடைந்ததும் ஒருவரையும் காணாததால் "அண்ணே! அண்ணே!!" எனக் குரல் கொடுத்தோம். எங்கும் ஒரே இருளாக இருந்தது. எமது அழைப்புக்கு பதில் எதுவும் வரவில்லை. மீண்டும் அழைத்தோம். திடீரென கரையில் இருந்து தீப் பிழம்புகளாக வேட்டுக்கள் எம்மை நோக்கிச் சீறிப் பாய்ந்தன. உடனே நானும் என்னுடன் வந்தவர்களில் இளைஞர் ஒருவரும் கரையில் படுத்து நீரில் மறைந்து கொண்டோம். எம்முடன் வந்த ஏனையோர் கூக்குரல் இட்டபடி மற்றப் படகை நோக்கி ஓடினர்.

அவர்கள் படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் என நான் அஞ்சினேன்.

நானும் அந்த இளைஞனும் நாம் இழுத்து வந்த படகுடன் கரையில் தனித்து விடப்பட்டோம்.

நாம் இருந்த இடத்தை நோக்கி பல திசைகளில் இருந்தும் சரமாரியான வேட்டுக்கள் சீறிவந்தன.

வேட்டுக்கள் ஓய்ந்ததும், என்னுடன் வந்த இளைஞர் மீண்டும் "அண்ணே! அண்ணே!!" என்று கூப்பிட்டார். உடனே மீண்டும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நான் என்னுடன் வந்த இளைஞரைச் சத்தமின்றி படுத்துக்கிடக்கும்படி கூறினேன்.

#### கதை முடிந்தது என நினைத்தோம்

உடலெங்கும் சன்னங்கள் உரசி உரசி எரிவை ஏற்படுத்த எமது கதை முடிந்தது என எண்ணி சத்தமின்றிக் கிடந்தோம்.

தொடர்ச்சியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட பின் திடீரென பரா வெளிச்சக் குண்டு ஒன்று வானில் ஏவப்பட்டது. அதைத் தொடர்ந்து நாம் கிடந்த திசையை நோக்கி குண்டு ஒன்று வீசப்பட்டது.

எமக்கு அருகில் — நீரில் விழுந்த அக் குண்டு — காது செவிடுபடும்படியாக சத்தத்துடன் வெடித்தது. எமது படகும், படகில் இருந்த பெறுமதியான பொருள்களும் சிதறின; என் முதுகிலும் கால்களிலும் எரிகாயங்கள் ஏற்பட இரத்தம் கசியத் தொடங்கியது.

#### படையினர் பிடித்தனர்

காயங்களுடன் முனகிக் கொண்டு கிடந்த நான் உணர்விழக்கும் நிலையை அடைந்த போது பொழுது விடிந்தது. காவலரண்களிலிருந்து வந்த இராணுவத்தினர் எம்மைப் பிடித்தனர்.

தொலைவில் நின்ற படையினர் எம்மை நோக்கி ஓடி வந்து, வெறியுடன் எம்மைத் தாக்க முற்பட்டனர். சிங்களம் பேச முடிந்ததால் எமது நிலைமையைச் சொல்லி மன்றாடினேன்.

#### இளைஞருக்கு காயம்

என்னுடன் வந்த இளைஞர் படையினரின் தாக்குதலால் தலையில் காயமடைந்தார்.

பின்னர் நாம் ஜீப் ஒன்றில் ஏற்றப்பட்டு, ஆனையிறவு முகாமில் உள்ள இராணுவப் பொலீஸாரிடம் கொண்டு சென்று ஒப்படைக்கப்பட்டோம். அங்குள்ள சிகிச்சை நிலையம் ஒன்றில் எமது காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

#### தாக்க முற்பட்டனர்

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பல சமயங்களில் இராணுவத்தினர் எம்மை தாக்க முற்பட்டனர். அவர்களின் வெறித்தனமான பார்வை துப்பாக்கி வேட்டுக்களை விடப் பயங்கரமாக இருந்தது.

ஆனையிறவில் இருந்து வெள்ளைக் கொடியைப் பிடித்தவாறு, இயக்கச்சி ஊடாக எம்மை குடாநாட்டின் மற்றைய பிரதேசத்துக்குள் போகுமாறு படையினர் வேண்டினர். ஆனால் நாங்கள் அதற்கு மறுத்து விட்டோம். வழியில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் இருக்கும் என்பதால் ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சி வழியாக வெளியேற நாம் மறுத்து விட்டோம்.

இதனையடுத்து 29 ஆம் திகதி மாலையில் ஹெலி ஒன்றில் எம்மை ஏற்றி பலாலிக்குக் கொண்டு சென்றனர். அங்கு தனி அறை ஒன்றில் எம்மைப் பூட்டி வைத்தனர்.

#### மேலும் 50 தமிழர்கள் பலாலியில்

எம்மைப் போலவே ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

அவர்களில் பலரும் தாங்கள் தமிழ் நாட்டுக்குச் செல்லும் வழியில் கடலில் வைத்துப் படையினரிடம் அகப்பட்டதாகக் கூறினர். அவர்களில் வயதில் குறைந்த இளைஞர்கள் சிலர் இராணுவத்தினருக்கு ஏவல் வேலைகளைச் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

#### இரண்டு வாரங்களின் பின்னர் விடுதலை

இரண்டு வாரங்களுக்கு மேல் அங்கு நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். பின்னர் அங்கு வந்த செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் எம்மைச் சந்தித்துப் பேசினர். அவர்கள் மூலமாக நாம் விடுதலை பெற்றோம். — என்றார். (உ-5)

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை செல்லம்மா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை செல்லம்மா 05-10-1992 அன்று கொழும்பில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், அன்னலட்சுமி, தனலட்சுமி, பரராஜசிங்கம் (R. L. Y.), சிவபாக்கியம் (Malaysia), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும்; மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம் (P. M.), குட்டித்தம்பி, நடேசன், G. M. பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும்; குலசிங்கம் (குலா - U. S. A.), விமலன் (கனடா) கபிலன் (U. K.), சுஜந்தி, நாதன், ஜெயம், பாலசிங்கம், கமலா, லோகேஸ், பரமேஸ், அம்பிகா, நகுலேஸ், விக்கினேஸ், கணேஸ், அப்புச்சி, சிவா, இந்திரா, சந்திரன் சாந்திமதி, ஜெகதீஸ், மனோகரி, வஜிரபாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 07-10-1992 அன்று கொழும்பில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தயவாக வேண்டுகின்றோம்.

தகவல்:
பரராஜசிங்கம்.
(மகன்)

7ஆம் கட்டை,
சண்டிலிப்பாய்.

(22939)

## அப்புத்துரை விசாலாட்சி

மலாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது மட்டுவில் தெற்கில் வசித்து வந்த அப்புத்துரை விசாலாட்சி 16-10-1992 அன்று காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17-10-1992 நேற்று மட்டுவில் தெற்கு மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுசீலாதேவி நடராசா

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(22945)

## தியாகராசா தவக்குமார் (கண்ணன்)

அல்வாய் வடக்கு திருவிசிமாலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருமதி முத்தம்மா தியாகராசாவின், தலைப்புதல்வனுமான, தியாகராசா தவக்குமார் (கண்ணன்) 15-10-1992 அன்று பம்பாயில் காலமானார். இவர் தவசோதியின் அன்புச் சகோதரனும், கு. தருமரத்தினத்தின் மைத்துனருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. முத்தம்மா (பவளம்)
(தாய்)

(சி/3493)

## முருகேசு பொன்னம்பலம்

(நயினாதீவு)

நயினாதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகேசு பொன்னம்பலம் 16-10-92ல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி முருகேசுவின் மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், வசந்தராசன், சண்முகதாஸன், கண்ணதாசன், சுகந்தினி, சத்தியவதனி, சிவதர்சினி, வீரகேசன் ஆகியோரின் தந்தையாரும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை, தங்கம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மா, காலஞ்சென்ற மார்க்கண்டு, காலஞ்சென்ற செல்லமுத்து சிவக்கொழுந்து, காலஞ்சென்ற இராசம்மா தாமோதரம்பிள்ளை, கமலவதி ஆகியோரின் சகோதரனும், நடராசா, காலஞ்சென்ற கமலாம்பிகை, காலஞ்சென்ற மயில்வாகனம் மனோன்மணி, கனகரெத்தினம் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 18-10-92 காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக சித்துபாத்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த. சிவயோகலிங்கம் (ஆசிரியர்)
(மருமகன்)

A. V. றோட்,
பாலவளவு,
அரியாலை.

(22943)


யாழ் நகரில் ஓர் புதிய அழகு மாளிகை

ஜெயா அழகு சாதன மாளிகை

★ தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள்,
★ மணப்பெண்களின் சோடனை நகைகள்,
★ லேஸ், நூல் வகைகள்,
★ சிறுவர் விளையாட்டுப் பொருள்கள்,
★ வெளி நாட்டு, உள் நாட்டு அழகு சாதன பொருள்கள்

மற்றும்

★ எவர் சில்வர் பொருள்களை

நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- வியாபாரிகள் மேற்குறிப்பிட்ட பொருள்களை மொத்தமாக விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜெயா அழகு சாதன மாளிகை
177 A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)

தலைமையகம்
ஜெயா பான்சி கவுஸ்
160, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு:- ஷன் றெக்கோடிங் டிப்போட்

(22944)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org